# மஞ்சள் பயிரை தாக்கும் நோய் மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள்

மஞ்சள் பயிரிடப்படும் அனைத்து பகுதியிலும் பலவிதமான நோய்கள் தாக்கி விளைச்சல் இழப்பை ஏற்படுத்துகின்றன. இந்நோய்களின் தீவிரம் அந்தந்த பகுதிகளில் நிலவும் தட்பவெப்ப நிலை, மண்ணின் தன்மை ஆகியவற்றிற்கு ஏற்ப மாறுபடுகிறது.

## பூச்சிகள்

### செதில் பூச்சிகள்

இப்பூச்சிகள் மஞ்சள் கிழங்கு பகுதியினைத் தாக்கி சேதம் விளைவிக்கும். அதனால் கிழங்குகள் சுருங்கி பின் காய்ந்துவிடும்.

### கட்டுப்படுத்தும் முறைகள்

இப்பூச்சியை கட்டுப்படுத்த பாசலோன் 1.5 மிலி/லி தண்ணீரில் 15 நிமிடம் ஊற வைத்து கிழங்குகளை நடவு செய்ய வேண்டும். செதில் பூச்சியால் பாதிக்கப்படும் பயிர்களை மஞ்சள் பயிரிடும் நிலத்தில் பயிர் செய்யக் கூடாது. நடவு செய்யப்பட்ட வயலில் செதில் பூச்சிகளை கட்டுப்படுத்த டைமீதோயேட் 2 மிலி (1 லிட்டர் தண்ணீரில் கலந்து வேர்பாகம் நனையும்படி ஊற்ற வேண்டும்.)

### இலைப்பேன்

இப்பூச்சிகள் இலைகளின் சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் பயிர் வாடிவிடுகின்றன.

### கட்டுப்படுத்தும் முறைகள்

இப்பூச்சியை கட்டுப்படுத்த டைமெக்ரான் 750 மி.லி/எக்டருக்கு என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

### தண்டு துளைப்பான்

இப்புழுக்கள் மஞ்சளின் தண்டுப்பகுதி மற்றும் கிழங்கு பகுதியினை துளைத்து நாசம் செய்யும். இப்புழு தாக்குதலினால் தண்டுப் பகுதியில் துவாரங்கள் காணப்படும். தாக்கப்பட்ட செடிகளில் நடுக்குருத்து காய்ந்துவிடுகின்றன.

## நோய்கள்

### கிழங்கு அழுகல் நோய்

மண்ணில் தங்கி வாழும் தன்மையுடைய, பித்தியம் என்னும் பூஞ்சாணத்தால் இந்நோய் பரவுகிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட கிழங்குகள் அழுகி துர்நாற்றம் வீசும். பாதிக்கப்பட்ட செடியின் இலைகள் பழுப்பு நிறமாக மாறி பிறகு காய்ந்துவிடும். காய்ந்த செடிகளை பிடுங்கிப் பார்த்தால் வேர்ப்பகுதிகள் முழுவதும் அழுகிக் காணப்படும்.

### கட்டுப்படுத்தும் முறைகள்

நடவுக்கு முன்பாக பார்களில் டிரைக்கோடெர்மா விரிடி என்ற எதிர் உயிர் பூசணத்தை ஏக்கருக்கு 1 கிலோ என்ற அளவில் இடலாம். இந்த எதிர் உயிர் பூசணத்தை 100 கிலோ அளவுள்ள மக்கிய தொழு எருவுடன் கலந்து பார்களில் இடவேண்டும்.

- வாடிய செடிகளை அப்புறப்படுத்த வேண்டும்
- காப்பர் ஆக்ஸிகுளோரைடு 0.25% என்ற அளவில் மருத்து கரைசலை கிழங்குப் பகுதி நனையுமாறு ஊற்ற வேண்டும்.

### டாப்ரினா இலைப்புள்ளி நோய்

இந்நோய் இலையின் மேல் பகுதியில் இலை நரம்பை ஒட்டி பழுப்பு நிற புள்ளிகள் முதலில் உண்டாக்குகிறது. இவ்வாறு உண்டான புள்ளிகள் விரிவடைந்து ஒன்றுசேர்ந்து இலையின் ஓரங்கள், நுனிப்பகுதி கருகத் தொடங்கி பின்பு இலை முழுவதும் காய்ந்துவிடுகிறது.

### கட்டுப்படுத்தும் முறைகள்

இந்நோயை கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினை 0.25% தெளிக்க வேண்டும்.

### கொலிட்டோடிரைக்கம் இலைப்புள்ளி நோய்

இலையின் மேற்பரப்பில் சிறிய கரும்பழுப்பு நிற புள்ளிகள் தோன்றும். இந்த கருமை நிறப் புள்ளிகளின் மையப் பகுதியில் இந்நோயை உண்டாக்கும் பூசணத்தின் வித்துக்கள் காணப்படும். இவ்வாறு பாதிக்கப்பட்ட இலைகள் காய்ந்துவிடும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- இலைப்புள்ளி தென்பட ஆரம்பித்தவுடன் பாதிக்கப்பட்ட இலைகளை அகற்றி விடவேண்டும்.

- இந்நோயை கட்டுப்படுத்த மேன்கோசெப் 400 கிராம்/ஏக்கர் (அ) 200 கி/ஏக்கர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.